பயிற்சி மாணவிகள் மதியம் உணவு உண்டபின், இரவில் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டதன் காரணமாக இரவு 10-00 மணியளவில் 52 செவிலியர் மாணவிகளும், 11-5-2012 அன்று 41 மாணவிகளும், 12-5-2012 அன்று 28 மாணவிகளும் மொத்தம் 121 பேர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி, உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: அவர்கள் அனைவருக்கும் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு முழுமையாக குணம் அடைந்து 15-5-2012 அன்று மாலை, அனுமதிக்கப்பட்ட அனைத்து செவிலியர் பயிற்சி மாணவிகளும் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டனர். மாணவிகளின் உடல்நலம் பாதிக்கப்பட்டவுடன், உணவில் கலப்படம் உள்ளதா, மற்றும் தண்ணீரின் நிலை Water contamination குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. கல்லூரி விடுதிகள் மற்றும் தண்ணீர்த் தொட்டிகள் போன்ற இடங்களில் சுகாதாரத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாணவிகள் பயிலும் கல்லூரி மற்றும் விடுதிகள் அல்லாது, மொத்த மருத்துவமனை வளாகமும் சுத்தம்—sterilize செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருக்கோவிலூர் தொகுதியில் அரசு மணல் குவாரிகளின் விதிகளை மீறி மணல் அள்ளுவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

***திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட கீழையூர் மற்றும் அன்டராயநல்லூர் பகுதிகளிலே மணல் குவாரி இயங்கி வருகிறது. இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால், அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சின்னசேலம்-ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர்-வேட்டவலம் குடிநீர்த் திட்டம் ஆகியவை என்னுடைய

2012 மே 15] [திரு. எல். வெங்கடேசன்]

தொகுதிக்குட்பட்ட அந்தப் பகுதிகளிலேயிருந்துதான் செல்கிறது. மேலும் அரகண்டநல்லூர், திருக்கோவிலூர் பகுதிக்கும் இதுதான் நீர் ஆதாரமாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சுருக்கமாக, இந்தமாதிரி மணல் குவாரி பிரச்சினை இருக்கிறது என்றும், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் என்றும் சொன்னால், அமைச்சர், அவர்கள் அதற்குப் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. எல். வெங்கடேசன்: நீராதாரம் குறைந்துகொண்டு வருகிறது. எனவே, அந்தக் குவாரியை நிறுத்த வேண்டுமென அவையின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

(இ) தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி ஜக்கம்மாதேவி ஆலயத்தில் அரசு விழா இரத்து செய்யப்பட்டதுடன் காவலர்கள் பொதுமக்களைத் தாக்கியதால் ஏற்பட்ட பதற்ற நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி, ஜக்கம்மாதேவி ஆலயத்தில் நடைபெறவிருந்த அரசு விழா இரத்து செய்யப்பட்டு, காவலர்கள் அத்துமீறி நுழைந்து பக்தர்களையும், பொதுமக்களையும் அடித்து, உதைத்து, துன்புறுத்தி கைது செய்ததால் ஏற்பட்ட பதற்ற நிலை குறித்து தங்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். இது என்னுடைய ஆய்வில் உள்ளது.

(ஈ) வெளிநாட்டில் வாழும் தமிழர்களைப் பாதுகாக்க ஆணையம் ஒன்று ஏற்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த பல இலட்சம் மக்கள் வெளிநாடுகளிலே மாணவர்களாகவும், படிப்பவர்களாகவும் இருந்து

வழிகாட்டல்கள், நெறிமுறைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும், பலவகையான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இத்தகைய சூழ்நிலையில், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை, உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலை ஏற்று, என்ன மாதிரியான கட்டணங்களை வரைமுறை செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(ஆ) திருக்கோவிலூர் தொகுதியில் அரசு மணல் குவாரிகளின் விதிகளை மீறி மணல் அள்ளுவதைத் தடுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மணல் குவாரிகளில் அரசு விதிமுறைகள் மீறப்பட்டு குடிநீர் ஆதாரப் பகுதிகளிலும், பாலப் பகுதிகளிலும் மணல் எடுக்கப்படுகிறது. நேற்றுகூட இதுபற்றி ஊடகங்களிலே செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதன்மீது அரசு என்ன கொள்கை வைத்திருக்கிறது என்பது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறகு பதிலைச் சொல்லலாம்.*

(ஒ) பல்கலைக்கழகங்களில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தற்காலிகப் பணியாளர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலும், பாரதியார் பல்கலைக்கழகத்திலும் வேளாண்மைத் துறையில்* ATMA *என்ற அடிப்படையிலும், பாரதியார் பல்கலைக்கழகத்தில் தற்காலிக அடிப்படையில் எடுக்கப்பட்ட பணியாளர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை. இதனால் அவர்களை நிரந்தரம் செய்கின்றபோது இடையூறாக இருக்கும். எனவே, தற்காலிகப் பணியாளர்களைப் பணிக்கு எடுக்கும்போதும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களை எடுக்க வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மேலும், மாவட்ட எல்லைகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டும், அண்டை மாநிலங்களுக்கு அரிசி கடத்துபவர்கள்மீது கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்வதோடு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் 200 வாகனங்களில் அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ந்து கடத்திக் கொண்டிருந்தார்கள்; ஆட்சியாளர்களுடைய உடந்தையோடு அரிசி கடத்தப்பட்டது என்பதையும் இந்த அவைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

(ஆ) திருக்கோவிலூர் தொகுதியில் அரசு மணல் குவாரிகளின் விதிகளை மீறி மணல் அள்ளுவதைத் தடுத்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்களும், எழுப்பிய இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள் ஆற்றிலே மணல் அதிகமாக அள்ளப்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், ஒரு மீட்டர் ஆழத்திற்குமேல் மணல் அள்ளக்கூடாது என்று ஆணையிட்டு, அந்த அளவிற்குத்தான் அள்ளிக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல, மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள் நேற்றையதினம் நடந்ததைப் பற்றிச் சொல்லியிருந்தார்கள். உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து, அதற்குண்டானவர்களைக் கைது செய்திருக்கின்றோம் என்பதைச் சொல்லி, இதுபோன்று ஒரு வருட காலத்திற்குள் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 13 கோடி ரூபாய் அபராதத் தொகையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)